කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
Department of Meteorology

TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk

அறிக்கை இல : 01 MSW/26/10/23/01

நிறம் : சிவப்பு

## கடும் காற்று மற்றும் கொந்தளிப்பான கடல் தொடர்பான எச்சரிக்கை:

இயற்கை அனர்த்தம் தொடர்பான முன்னெச்சரிக்கை நிலையத்தினால்,

அடுத்த 24 மணித்தியாலங்களுக்கு செல்லுபடியாகும் வகையில்

2026 ஒக்டோபர் 23ஆம் திகதி பிற்பகல் 04.30 மணியில் வெளியிடப்பட்டது.

**ஆழம் கூடிய வங்காள விரிகுடா கடற்பரப்புகளில் நடவடிக்கைகளில் ஈடுபடும் பலநாள் மீன்பிடிக் கலங்களுக்கு:**

**நடவடிக்கை எடுக்கவும்!**

**வடக்கு அந்தமான் தீவுகளுக்கு அருகில் வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக ஒரு புதிய குறைந்த அழுத்தப் பிரதேசம் உருவாகியுள்ளது. இத் தொகுதி பெரும்பாலும் அதே பிரதேசத்தில் நீடித்து, 2026 ஒக்டோபர் 24ஆம் திகதியளவில் ஒரு தாழமுக்கமாக வலுவடையும் என எதிர்பார்க்கப் படுகின்றது. அதன் பின் அது மேற்கு - வடமேற்குத் திசையில் நகர்ந்து, ஒக்டோபர் 25ஆம் திகதியளவில் ஒரு ஆழமான தாழமுக்கமாகவும், ஒக்டோபர் 26ஆம் திகதி காலையளவில் மேற்கு - மத்திய வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக ஒரு புயலாகவும் வலுவடையக் கூடிய சாத்தியம் உயர்வாகக் காணப்படுகின்றது.**

**எனவே, கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் வட அகலாங்குகள் 10N - 20N இற்கும் கிழக்கு நெட்டாங்குகள் 80E – 95E இற்கும் இடையில் உள்ள ஆழம் கூடிய கடற்பரப்புகளில் மறு அறிவித்தல் வரை நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுவதோடு, இந்தப் பிரதேசத்தில் கடலில் இருப்போர் உடனடியாக பாதுகாப்பான பிரதேசத்திற்கு நகருமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.**

இன்றைய (23) தரவுகளின் அடிப்படையில், அடுத்த 168 மணி நேரத்தில் சூறாவளி உருவாக்கம் (தாழமுக்கம் உருவாதல்) ஏற்படுவதற்கான நிகழ்தகவு.

කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
Department of Meteorology

TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk

| 24 மணி | 24-48 மணி | 48-72 மணி | 72-96 மணி | 96-120 மணி | 120-144 மணி | 144-168 மணி |
|---|---|---|---|---|---|---|
| மிதமான | உயர்வான | - | - | - | - | - |

Warning for Fishing and Naval Communities.
Issued at 04.30 p.m. on 23 October 2026. Valid for the period until 04.30 p.m. 24 October 2026.




மேற்குறிப்பிட்ட கடற்பரப்புகளில் கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுவதோடு, இவ்விடயம் தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படும் எதிர்கால ஆலோசனைகள் மற்றும் முன்னறிவிப்புகள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள்.